**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2019**

-----------------------------------------------------------------------------------------

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2019 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2019 ஆண்டின் நிர்வாக சபை அங்கீகரித்த நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதிக்கூற்றுக்கள்**

-----------------------------

**2.1 நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்**

-----------------------------------------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கைகள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2 **கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல்**

-------------------------------------------------------------------------------------

சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற போதிலும் மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள், ஏடுகள், பதிவேடுகள் என்பன பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமை

சபையினால் இறுதியாகத் தயாரித்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவுகள் என்பன தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 2,218,946,781 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 773,294,188 |
| மொத்த சொத்துக்கள் | 2,992,240,969 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 2,322,337,501 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 709,858,954 |
| மொத்த பொறுப்புக்கள் | 3,032,196,455 |
| தேறிய சொத்துக்கள் / உரித்து | (39,955,486) |
| மொத்த பொறுப்புக்கள் | 2,992,240,969 |
| மொத்த வருமானம் | 1,181,361,157 |
| மொத்த செலவுகள் | 1,562,383,680 |
| பற்றாக்குறை | (381,022,523) |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு

பின்வரும் இணக்கமிண்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 அந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - 9.4 ஆம் பந்தி | அமைச்சரவை அங்கீகாரமில்லாமல் நிறுவனத்தின் ஊழியர் ஒருவரை அமைச்சிற்கோ அல்லது வேறு நிறுவனமொன்றுக்கோ விடுவிப்பதற்கு அல்லது அவ்வாறு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நிறுவனத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளக்கூடாத போதும் சபையின் அரசியல் பழிவாங்கல் குழுவின் பரிந்துரையின் பேரில் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டு | அரசியல் பழிவாங்கும் குழுவின் பரிந்துரையின் பேரில், இந்த உத்தியோகத்தர் ஜனவசம சேவைக்கு மீண்டும் நியமிக்கப்பட்டார். ஜனவாசம தலைமை அலுவலகத்தில் வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக தொழிற்சங்கத்தின் எதிர்ப்பு காரணமாக அமைச்சின் கீழ் செயல்படும் எல்கடுவ தோட்ட நிறுவனத்தின் கீழ் சேவை புரிவதற்கு | அமைச்சரவை அங்கீகாரமில்லாமல் நிறுவனத்தின் ஊழியர் ஒருவரை அமைச்சிற்கோ அல்லது வேறு நிறுவனமொன்றுக்கோ விடுவிப்பதற்கு அல்லது அவ்வாறு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நிறுவனத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளக்கூடாது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீண்டும் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2017 ஆம் ஆண்டு முதல் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியில் ‘‘முகாமையாளர் - சந்தைப்படுத்தல்’’ பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் சபையால் அந்த உத்தியோகத்தருக்கு சம்பளமாக ரூபா 1,798,260 தொகை 2019 ஆம் ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் இறுதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிர்வாகத்திற்கு வேண்டியிருந்தது. நிறுவனத்திற்குள் மேலும் தொழில் தகராறுகளைத் தவிர்க்கும் பொருட்டு செய்யப்பட்டது. அதனையடுத்து, தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், ஜனவசம மற்றும் எல்கடுவ பெருந் தோட்டக் கம்பனி இரண்டு அமைச்சின் கீழ் வந்தமையால், ஜனவசம நிர்வாகம் இந்த உத்தியோகத்தரை 02.09.2020 முதல் பணிக்கு அழைப்பதற்கு ஜனவசம முகாமையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்ததால் அந்த நிறுவனம் அத்தகைய மாற்று நடவடிக்கையை எடுக்க வேண்டியிருந்தது. | |
| (ஆ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் அரசின் காணி முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | அரச காணிகளை குத்தகைக்கு விடுதல், விற்பனை செய்தல் மற்றும் பத்திரம் மூலம் அகற்றும் போது பெறுமதி / குத்தகை அறவீடு அரசாங்க மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும், ஆனால் மொனராகலை குமாரவத்தை தோட்டத்தில் உள்ள பாரவில இறப்பர் காணியை குத்தகைக்கு அரசாங்க மதிப்பீட்டாளரிடம் இருந்து அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட வில்லை. | சனாதிபதி செயலாளரினால் 2010.02.03. ஆந் திகதி வெளியிடப்பட்ட SP/RD/02/10 சுற்றறிக்கையில் அரச வளங்களை விற்கும் போதும் அல்லது குத்தகைக்கு விடும் போதும் அரசாங்க மதிப்பீடு பெறப்பட வேண்டும் என ஜனாதிபதியின் செயலாளர் உறுதிப்படுத்தியுள்ள போதிலும், நிறுவனத்தின் நிதி நெருக்கடி காரணமாக அரசாங்க மதிப்பீடு பெறப்படவில்லை. மேலும், இந்தக் | அரச காணிகளை குத்தகைக்கு விடுதல், விற்பனை செய்தல் மற்றும் பத்திரம் மூலம் அகற்றும் போது பெறுமதி / குத்தகை அறவீடு அரசாங்க மதிப்பீட் டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | காணியை வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு பொருத்தமான மற்றும் அந்த முதலீட்டாளருக்கு பொருத்தமான காணியை அடையாளம் கண்டதன் பின்னர் அரசு மதிப்பீட்டை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதால் அதன் பிரகாரம் மதிப்பீடு கோரி அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக மிக நீண்ட காலம் எடுப்பதால் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட குத்தகை பெறுமதியை அடிப்படையாக கொண்டு குத்தகை ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு பாதிப்பு ஏற்படாமல் அரசின் மதிப்பீட்டின் பேரில் குத்தகையை திருத்தம் செய்வதற்கு உரிய நிபந்தனைகளை உடன்படிக்கையில் உள்ளடக்குகுத்தகை உடன்படிக்கை அவதானிப்பில் தென்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயற்பாடும் மீளாய்வும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனராகலை குமாரவத்த தோட்டத்தின் பாரவில பிரிவில் 15 ஹெக்டேயர் காணியில் இறப்பர் செய்கையை சபை | 2019.09.18 ஆந் திகதி அப்போதைய தலைவரால் அனுப்பிய கடிதத்தின்படி, இந்த நிலத்தின் ஒரு பகுதி தரிசு | இந்த இறப்பர் செய்கை உட்பட முழு காணிக்கும் மதிப்பீட்டு அறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பித்திருந்ததுடன், 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை ரூபா 8,346,368 ரூபாய் செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், சபைக்கும் தொடர்புடைய குத்தகைதாரருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட 158 ஆம் இலக்க ஒப்பந்ததின் படி அக்காணியை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் சபை 30 ஆண்டுகளுக்கு குத்தகையாக ரூபா 11,423,415 மொத்தமாக பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, இந்தக் காணியைக் குத்தகைக்கு வழங்கி உரிய பயிர்ச்செய்கைக்கு செலவிட்ட செலவுக்கு ஏற்றவாறு நலனொன்றைப் வருமானத்தைப் பெறுவதற்குரிய ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | நிலமாக கருதப்பட்டதாகவும், அதன்படி இறப்பர் செய்கையை கருத்தில் கொள்ளாமல் குத்தகை அளவு கணக்கிடப்பட்டதாகவும் தெரிகிறது. தற்போதுள்ள இறப்பர் மரங்களின் அளவு அல்லது அதன் மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் தரிசு நிலங்களுக்குப் பொருந்தும் குத்தகை அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளதால், இந்தக் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு தற்போதைய பணிப்பாளர் சபையிடமிருந்து ஆலோசனை கிடைத்துள்ளதுடன் அவ்வாறு இரத்துச் செய்யும் போது குத்தகையாளரால் செலுத்தப்பட்டுள்ள ரூபா 1.25 மில்லியனான முற்பணத்தை திருப்பிச் செலுத்த தேவையான நிதி நிறுவனத்திடம் இல்லை என்பதால் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு முடியாதுள்ளது. இல்லையென்றால் இந்த இறப்பர் தோட்டம் உட்பட முழு காணிக்கும் அவர்களின் திட்ட அறிக்கைக்கு பொருத்தமான மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்று குத்தகை தொகையை அதற்கேற்ப திருத்தி ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். | பெற்றுக்கொள்ளப்பட்டன் பின்னர்னுகுத்தகை தொகையை திருத்தம் செய்வதற்கு ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். |
| (ஆ) | வெற்றிகரமான தேயிலை பயிர்ச் செய்கைக்காக செய்ய வேண்டிய மிக முக்கியமான விவசாய நடவடிக்கை தேயிலை நாற்றுமேடைகளை பராமரிப்பதாகும். தேயிலை நாற்றுமேடை கட்டுப்பாட்டின் முக்கிய நோக்கம், செழிப்பற்ற அல்லது இறந்த தாவரங்களின் குறைந்த சதவீதத்தை பராமரிக்கும் அதே வேளையில், குறைந்த செலவில், ஒரே மாதிரியாக நன்கு வளர்ந்த, ஆரோக்கியமான மற்றும் திடமான தேயிலை நாற்றுக்களை குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தி செய்வதாகும். ஆனால், தற்போது சபையின் தோட்டங்களில் தேயிலை நாற்றுமேடை ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்படாமல் இருப்பதுடன், | வெற்றிகரமான தேயிலை பயிர்ச்செய்கைக்காக செய்ய வேண்டிய மிக முக்கியமான விவசாய நடவடிக்கை தேயிலை நாற்றுமேடைகளை ஆரம்பிப்பதே என்பதை முகாமைத்துவம் தற்போது விளங்கியுள்ளதால் 2021 ஆம் ஆண்டின் போது எமது நிறுவனத்திற்குச் சொந்தமாக 14 தோட்டங்களில் 1,350,000 அளவலான நாற்றுக்களுடன் நாற்றுமேடையொன்றை ஆரம்பிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அறிய தருகின்றோம். இதன் மூலம் இவ்வாண்டின் தேயிலை மீள் நடுகைக்கும் நடுகை தொடர்பாக அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | வெற்றிகரமான தேயிலை பயிர்ச் செய்கையை பராமரித்துச் செல்வதற்கு பிரதேசங்களுக்கு பரிந்துரைத்த, நன்கு வளர்ந்த, ஆரோக்கியமான மற்றும் திடமான தேயிலை நாற்றுக்களை குறைந்த செலவில் பேணிச்செலல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதனால் நடுவதற்கு தேவையான நாற்றுகளை வெளி தரப்பினரிடம் இருந்து செலவினமொன்றை செய்து பெற்றுக் கொள்வதற்கு நேர்வதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | 2017 முதல் 2019 வரை சபையால் வெளியிடப்பட்ட செயலாற்றல் அறிக்கைகளின் பரகாரம் 16 தோட்டங்களின் சராசரி விற்பனை பெறுமதியுடன் ஒப்பிடும்போது, ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திச் செலவு எதிர்மறையாக இருந்தது, இது 2017 ரூபா 100 முதல் ரூபா 594 இற்கும் இடைப்பட்ட வீச்சிலும் 2018 இல் ரூபா 53 முதல் ரூபா 487 இற்கு இடைப்பட்ட வீச்சிலும் காணப்பட்டதுடன் அது 2019 ஆம் ஆண்டில் ரூபா 573 முதல் ரூபா 2109 ஆன வீச்சு வரை மறை பங்களிப்பு அதிகரிப்பினை அவதானிக்க முடிந்தது. அதன்படி, ஒரு கிலோகிராம் தேயிலை விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் உற்பத்தி செலவை ஈடுகட்ட முடியாத நிலைமையில் தொடர்ந்தும் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிற்கான ஒரு கிலோ தேயிலையின் உற்பத்திச் செலவு உங்களது அறிக்கையின்படி சரி செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடுவதுடன் (அறிக்கையில் 2019 ஆம் ஆண்டிற்கான உற்பத்திச் செலவு மாதாந்த தரவுகள் குறிப்பிடப்படுகின்கிறன). மீளாய்வாண்டில் அறுவடை வளர்ச்சியில்லாமை காரணமாக உற்பத்திக் கிரயம் அதிகரித்துள்ளதாக குறப்பிடுகின்றேன். உரிய முறையின் பிரகாரம் உரங்கள் மற்றும் இதர விவசாய கருவிகள் முறையாக வழங்கப்படாததால், கொழுந்தின் தரம் குறைந்ததால் விற்பனை விலை குறைந்துள்ளது. அத்துடன் தொழிற்சாலையின் பஇயந்திரங்கள் ஒழுங்காக பராமரிக்கப்படாமையால் தேயிலைத் தூளுக்கு குறைந்த விலை கிடைத்துள்ளது. 2020/2021 ஆம் ஆண்டுகளில் நொப், லெவலன், லூல்கந்துர ஆகிய தொழிற்சாலைகளின் பராமரிப்பு வேலைகள் நடந்து வருகின்றன. விற்பனை விலையில் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. | ஒரு கிலோ கிராம் தேயிலை விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வுரமானத்தில் அதற்காக செலவிடப்படும் உற்பத்தி கிரயத்தை மேவுகை செய்யும் வகையில் செயற்திறனான வகையில் தேயிலை உற்பத்தி, மற்றும் கிரய முகாமைத்துவம் செய்து விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | பெருந்தோட்ட அமைச்சின் பெருந்தோட்ட பயிர் புள்ளி விபரங்களின் பிரகாரம் ஒரு ஹெக்டேயரில் மாதாந்த சராசரி விளைச்சல் 1600 கிலோ கிராம்களாக இருந்த போதும் 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சபையின் அனைத்து தோட்டங்களிலிலும் விளைச்சல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது தோட்டங்களில் அப்பெறுமதி 335 கிலோ கிராம்களிலிருந்து 733 வரையான குறைந்த வீச்சினை எடுத்திருந்தது. | பெருந்தோட்ட அமைச்சின் பெருந்தோட்ட பயிர் புள்ளி விபரங்களின் பிரகாரம் ஒரு ஹெக்டேயரில் மாதாந்த சராசரி விளைச்சல் 1600 கிலோ கிராம்களாக இருந்த போதும் எமது விளைச்சல் அந்நிலைமையில் இல்லாமல் இருப்பதற்கு 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முறையாக முறையாக உரம் இடாமல் வெளிக்களத்தில் முறையாக புட்களை கலையாமல் (பராமரிக்காமையால்) சுற்றாடல் காரணிகள் வேறுபட்டதால் ஆகும். நிறுனத்தின் தொழிற்படு | பெருந்தோட்ட அமைச்சின் பெருந்தோட்ட பயிர் புள்ளி விபரங்களின் பிரகாரம் ஒரு ஹெக்டேயரில் மாதாந்த சராசரி விளைச்சலை பேணுவதற்காக சபையின் தோட்டங்களை முறையாக பராமரிப்பதற்கும் முறையான பசளையிடுவதற்கும் முகாமைத்துவம் |

| | | | |
|---|---|---|---|
| | | மூலதனம் இல்லாமை காரணமாக மீண்டும் நாற்றுக்களை நடாமை இதற்காக தாக்கமளித்த பிராதன காரணமாகும் | கவனம் செலுத்த வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் சபைக்குரிய 16 தோட்டங்களின் உள்ளவாறான முடிவுத் தேயிலை இருப்பு 1,371,537 கிலோ கிராம்களாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 64,232 கிலோ கிராம் குறைவாக காண்பிப்பதுடன் பாதீடு செய்யப்பட்ட விளைச்சலுக்கு ஒப்பாக 702,693 கிரோகிராம் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தில் காணப்பட்ட நிதி சார் பிரச்சினை காரணமாக பசளை மற்றும் ஏனைய விவசாய உபகரணங்கள் தோட்டங்களுக்கு வழங்காமை காரணமாக விளைச்சல் வருடாந்தம் குறைவடைந்துள்ளதுடன் 2020 ஆம் ஆண்டின் போது 2019 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக விளைச்சல் 6% அளவில் அதிகரித்திருந்தது. | வருடாந்தம் விளைச்சலை அதிகரிப்பதற்காக மதிப்பீடு தயாரிப்பது உட்பட அதன் பிரகாரம் வளைச்சலை அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையினால் நிருவகிக்கப்படுகின்ற 16 தேயலைத் தோட்டங்களின் 10,165 ஹெக்டேயர் அளவான தேயிலை செய்கைக்கு ஒதுக்கீடு செய்த காணி அளவு தொடர்பாக சபையினால் தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தன. (Hectarage statement 2019) அந்த அறிக்கையின் பிரகாரம் மொத்த பூமியில் தேயிலை மற்றும் ஏனைய பயிர் செய்கைக்கு 4,895.79 ஹெக்டேயர் அளவிலான காணி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. கட்டிடங்களுக்காக வரும் 1214 ஹெக்டேயர் அளவிலான காணியின் அளவு ஒதுக்கப்பட்ட பிறகு 4054.97 ஹெக்டேயர் அளவிலான காணி தேயிலை செய்கைக்காக பயன்படுத்தப்படவில்லையெனவும் அது மொத்த காணி அளவில் 39.89 சதவீதமான அளவொன்றாக இருப்பதால் இக்காணியை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்து வதற்கு சபையிடம் திட்டமொன்று இல்லையெனவும் அவதானிக்கப்பட்டது. | வருடக் கணக்காக நிறுவனத்தில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மூலம் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் மீள் பயிரிடல் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் 2017/2018 ஆம் ஆண்டுகளில் குறைந்தளவு தேயிலையுடன் கூடிய பிரதேசத்தின் அளவு குறைக்கப்பட்டதால் நிலத்தில் அதிகரிப்பொன்று இடம்பெறாததுடன் 2021 ஆம் ஆண்டின் போது தோட்டத்திற்கு 10 ஹெக்டேயர் வீதம் பயிரிடுவதற்காக ஒவ்வொரு தோட்டத்திலும் தேயிலை நாற்றுமேடை ஆரம்பித்து தேயிலை பயிர்செய்யப்படும் அளவினை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் ஏனைய பயிர்செய்கை வகைகளும் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய தருகின்றேன். (கராம்பு, கோப்பி, கருவா, ஏலம் போன்ற வகையில்) | சபையிடமுள்ள காணியை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் எடுக்க வேண்டும். |
| (எ) | இறப்பர் பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கீடு செய்த காணி அளவு தொடர்பில் சபையினால் தயாரிக்கப்பட்ட காணிப் பதிவேட்டின் (Hectarage statement 2019 பிரகாரம்) இறப்பர் | வருடக் கணக்காக நிறுவனத்தில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக இறப்பர் மீள் பயிரிடல் அல்லது புதிதாக பயிர்ச்செய்கை இடம்பெறாததால் காணி அளவில் அதிகரிப்பொன்று இடம் | சபையிடமுள்ள காணியை செயற் திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தும் வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | பயிர்ச்செய்கைக்காக 2177 ஹெக்டேயர் இருந்த போதும் இறப்பர் பயிர்ச் செய்கைக்காக 742 ஹெக்டேயரும் ஏனைய பயிர்களுக்காக 26 ஹெக்டேயர் மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் 1408 ஹெக்டேயர் அளவில் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. அதன் பிரகாரம் மொத்த காணி அளவில் 64.6 சதவீதம் இறப்பர் செய்கைக்கு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. இக்காணி பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்து வதற்காக சபையிடம் திட்டமொன்று காணப்படவில்லை. | பெறவில்லை என்பதுடன் 2021 ஆம் ஆண்டின் போது ஒரு தோட்டத்திற்கு 10 ஹெக்டேயர் வீதம் பயிரிடல் மூலம் பலவீனமான நிலையில் காணப்படும் இறப்பர் பயிர்ச் செய்கையிலிருந்து நீங்கி மீள் நடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | திட்டங்களைத் தயாரித்தல் திட்டம் உச்ச அளவில் வரும் வரை நடவடிக்கை எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஏ) | சபைக்கு சொந்தமான 604 ஹெக்டேயர் இறப்பர் செய்கை நிலங்களில் 322 ஹெக்டேயர் மாத்திரமே தரமான மற்றும் நடுத்தர தரமான நாற்றுகள் கொண்ட காணிகளாகும். 282 ஹெக்டேயர் அளவில் விளைச்சல் குறைவான இறப்பர் காணப்படுவதால் 282 ஹெக்டேயர் குறைவாகப் பயன்படுத்தப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு வருமானம் உழைக்கும் மொத்த காணி அளவில் 47 சதவீதம் மாத்திரமாக இருந்தது, அதன் பிரகாரம் தியலுமே தோட்டத்தில் இறப்பர் பயிர் செய்து வருமானம் உழைக்கும் காணியில் 89 சதவீத்திற்கு குறைந்த அளவில் இறப்பர் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | இறப்பர் பயிரிடப்பட்ட நிலத்தின் மொத்த ஹெக்டெயர் அளவில் 50% அளவில் இருப்பதாலும் அதிலும் கருத்திற் கொள்ளக் கூடியளவு விளைச்சல் குறைவடைவதற்கு காரணம் முறையாக வெளிக்களத்தில் பசளையிட்டு பராமரிக்காமல் இருப்பதும் நல்ல விவசாய தொழில்நுட்ப மரபுகள் பின்பற்றப்படாமையாகும். வெளிக்களத்தில் பராமரிக்காமை பயிர்ச்செய்கை மேற்கொள்ளா காணயில் மீண்டும் பயிர் செய்வதற்காக நிறுவனத்தில் உள்ள தொழிற்படு மூலதனம் போதுமாக இல்லாபமயால் மீள் பயிரிடல் மற்றும் பராமரித்தல் இடம்பெறவில்லை. அண்மையில் ஏற்பட்டுள்ள செயன் முன்னேற்றத்துடன் 2021 ஆம் ஆண்டில் அபிவிருத்தி துறை கருத்திற் கொள்ளக்கூடிய வகையில் பராமரிப்பதற்கும் மீள் பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | பயிர்ச்செய்கையை முறையாக பராமரித்து காணியை செயற்திறனாக பய்ன்பாட்டிற்கு எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் பசளைத் தேவைப்பாட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட பசளை செலவினம் ரூபா 61,673,682 ஆக இருந்த போதும் பசளைக்காக மீளாய்வாண்டில் உள்ளவாறாக ரூபா 2,073,745 செலவிடப்பட்டிருந்தது, காலரீதியான தேவைப்பாட்டின் பிரகாரம் | மீளாய்வாண்டிற்காக வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் நிறுவனத்தில் காணப்பட்ட நிதிசார் சிக்கல் காரணமாக பசளை இடுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதும், வெளித்தரப்பினருக்கு கொழுந்தை வழங்கும் இன்சைட் தனியார் கம்பனி மூலம் போஹில், | பயிர்ச்செய்கை மூலம் உரிய விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்க ாக பசளை இட்டு காலரீதியில் பயிர்ச் செயகையை முறையாக பராமரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தேவையான பசளை அளவு இடப்படாமை காரணமாக விதைகள் முளைத்தல் மற்றும் தேயிலை கொழுந்தின் தரம் குறைவதன் காரணமாக தேயிலைக்கான கேள்வி குறையும் ஆபத்தொன்று காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் 15 தோட்டங்களில் 03 தோட்டங்களுக்காக மாத்திரம் பசளைக்கான செலவினம் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தின் 03 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கொலபத்தன மற்றும் மஹவில ஆகிய தோட்டங்களுக்கு பகுதிக் கொடுப்பனவின் பேரில் பசளை வழங்கப்பட்டிருந்தது, 2021 ஆம் ஆண்டில் உரியவாறு பசளை இடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

## 3.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) MM 1-1 சம்பளத் தொகுதிக்கரிய கணக்காளர், மனித வள முகாமையாளர், சட்ட முகாமையாளர், முகாமையாளர் (வனம்) உள்ளக கணக்காய்வுவாளர் ஆகிய பதவிகளை வகிக்கம் ஆறுபேருக்கு மாதாந்தம் போக்குவரத்து படிகளாக ரூபா 50,000 வீதமும் ஒவ்வொரு பதவிகளுக்காக தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் லீற்றர் அளவிற்காக படியொன்று உட்பட 2019 ஆம் ஆண்டில் ரூபா 4,603,760 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, 1972 இன் 11 ஆம் விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் 5 மற்றும் 8 ஆம் பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அப்பிரிவுகளில் இவ்வாறான படிகள் கொடுப்பனவு தொடர்பாக திட்டவட்டமாக தகவல் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 6 உத்தியோத்தர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் படி, MM 1-1 தர உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து படிகளுக்கான உரித்து இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பின்வரும் காரணங்களுக்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஸ்தாபிக்கப்பட்ட 1972 இன் 11 ஆம் இலக்க விவசாயச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, இந்த நிறுவன உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து படியை வழங்க நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. மேற்படி சட்டத்தின் 5.b, 5.e, 8.8(1)(b), 8.1(b) ஆகிய உப பிரிவுகளின் கீழ், இவ்வாறான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் நிறுவனத்தின் பணிப்பாளர்களுக்கு உள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்படுவதற்கு முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2011.08.03 ஆந் திகதிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கும் அதன் பின்னர் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட இந்த படிகள் முகாமையாளர்களின் சம்பள முரண்பாடுகளைக் குறைப்பதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் முகாமையினால் தேவையின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. | |
| (ஆ) | ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட தயாரிப்பு மதியரைர் ஒருவருக்கு போக்குவரத்துக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 50,000 வீதம் ரூபா 476,667 ஆன போக்குவரத்துப் படியாகவும் அந்த உத்தியோகத்தர் உட்பட பெருந்தோட்ட முகாமையாளர் மற்றும் தயாரிப்பு மதியுரையாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மேலும் இரண்டு ஒப்பந்த உத்தியோகத்தர் களுக்காக ரூபா 410,400 ஆன எரிபொருள் படிகளும் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, இக்கொடுப்பனவு 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5 மற்றும் 8 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும், அந்தப் பிரிவுகளில் அத்தகைய கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான குறிப்பிட்ட தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | அத்தகைய பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு காணப்படும் உத்தியோகத்தர்கள் / உத்தேச செயற்திட்டத்துடன் அண்மித்த கடமைகளில் முறையாக நிறைவேற்று வதற்காக சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு அச்செயற்பாட்டை நிறைவேற்ற இயலுமை இல்லாததால் அதற்காக ஈடுபடுத்த நிறுவனத்தில் ஊழியர்கள் இல்லாமையை முக்கியமான காரணமாகும். 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிடமுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவர்கள் செயற்பட்டுள்ளதாகவும் அவர்களின் சம்பளம் மற்றும் வேதனங்கள் என்பவற்றை தீர்மானிப்பதும் அதிகாரங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்படுவதற்கு முகாமைத்துவம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவின் | 2019 யூலை 12 ஆந் திகதிய | கணக்கீட்டுப் பிரிவிலுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் சம்பளம், படிகள் மற்றும் நலன்களுக்காக மாத்திரம் ரூபா 22 மில்லியன் ஆன கிரயமொன்றை செலவிடுவதற்கு நேர்ந்திருந்ததுடன் அலுவலகங்களை பராமரிப்பதற்கான செலவுகளையும் ஏற்க நேர்ந்திருந்தது. எனினும் கணக்குப் பிரிவின் பொறுப்பான உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கத் தவறியதால், ரூபா 1,000,000 கட்டணம் செலுத்தப்பட்டு அப் பொறுப்பு தனியார் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முறையே 2018 பெப்ரவரி 28 மற்றும் 2019 பெப்ரவரி 28 ஆகிய திகதிகளில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அக்கால எல்லையையும் மிகைத்து ஒரு ஆண்டு முதல் இரண்டு ஆண்டு வரையான காலப்பகுதியொன்று கடந்ததன் பின்னர் ஒவ்வொரு ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி தனியார் கணக்கீட்டு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது, அத்தீர்மானங்கள் உரிய நேரத்தில் எடுக்கப்படாமை முகாமைத்துவ செயற்திறனின்மை என அவதானிக்கப்பட்டது. | 2019/05/கணக்கு/அ.ம.ப.37 பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரத்வத்த மற்றும் கம்பனிக்கு கணக்குகளை தயாரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. இதற்கு பணிப்பாளர் சபையின் எந்தவொரு உறுப்பினரும் விருப்பமின்மைய தெரிவிக்காததுடன் அப்போது இருந்த நிர்வாகம் எடுத்த தீர்மானத்தின் பேரில் இக்கணக்காளர் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் இதுவரை இந்நிறுவனத்தினால் 2017 கணக்கை தயாரித்து எங்களுக்கு வழங்கியுள்ளது. தற்போது 2017 இன் கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திறனின்மை இனங்காணப்பட்டு அவற்றுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் செயற்பாட்டிற்காக தனியார் கணக்காளர் கம்பனியொன்றைத் தெரிவுசெய்யும் போது ரூபா 200,000 குறைந்த கேள்வி | மேலும் கோவையின் பிரகாரம் GMS ஆசோசியேஷன் நிறுவனம் சமர்ப்பித்த விலை விபரங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ரூபா 1,500,000/- ஆகும். விலை விபரங்களின் பிரகாரம் | அரசின் பெறுகை செயற்பாட்டின் வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நிராகரிக்கப்பட்டு ரூபா 1,000,000 ஆன கூடிய கேள்வி தெரிவு செய்யப்பட்டதன் மூலம் சபைக்கு ரூபா 800,000 ஆன நட்டமொன்று இடம் பெற்றிருந்தது. கூடிய கேள்வி தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணம் தெளிவுபடுத்தப்படா திருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையிலும் மூன்று அங்கத்தவர்களில் ஒரு அங்கத்தவர் மாத்திரம் கையொப்பமிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இரண்டாம் இடத்தில் இருந்த நிறுவனம் செய்யப்பட்டிருந்தது, கேள்வி திறக்கும் போது குழுவின் மூலம் அது தவறுதலாக இரண்டு ஆண்டுகளுக்கு ரூபா 1,500,000 என சீராக்கப்பட வேண்டும். SBN அசோசியேஷன் நிறுவனம் மற்றும் ரத்வத்த ஆகிய இரண்டு கம்பனிகளின் நடைமுறை ஒப்பீட்டின் பிரகாரம் அந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. குழு உறுப்பினர் மாத்திரம் கையொப்பமிட்டதை ஏற்றுக் கொள்கின்றேன். |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் ஏழு சொத்துக்கள் தொடர்பாக கொழும்பு மாநகர சபை சமர்ப்பித்த மதிப்பீட்டு அறிக்கைகளின்படி, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையில் உள்ள வீதவரி ரூபா 33,728,663 ஆகும். மேலும், இந்த சொத்துக்களில் குத்தகைக்கு விடப்பட்ட வளாகத்திலிருந்து ஆண்டுதோறும் பெறப்படும் மொத்த வரி ரூபா 41,003,896 மற்றும் வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூபா 5,647,488 தொகை என அவதானிக்கப்பட்டது. இதன்படி, போதிய தொகை குத்தகையாக வசூலிக்கப்பட்ட போதிலும், சபையினால் மதிப்பீட்டுத் தொகையை உரிய உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செலுத்தத் தவறியமை அவதானிக்கப்பட்டது. | உங்களின் அவதானிப்பினை சபை ஏற்றுக்கொள்கிறது. எவ்வாறாயினும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் நிதி நெருக்கடி காரணமாக, குறித்த வருடங்களுக்கான கொடுப்பனவுகள் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை. எனினும் 55/39 ஆம் இலக்க வீத வரிக்காக 2019.10.30 ஆம் திகதி ரூபா 8,264,758.80 செலுத்தப்பட்டுள்ளது. குத்தகைக்கு விடப்பட்ட வளாகத்திலிருந்து ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய குத்தகை ரூபா 41,003,896 என குறிப்பிப்பட்டிருந்த போதும் ஆனால் அந்த குத்தகைகளில் உள்ள பிழைகள் மற்றும் வரி செலுத்துவோர் வரிகளை முறையாக செலுத்தவில்லை. இருப்பினும், 1 மற்றும் 2 ஆம் பதில்களின் பிரகாரம், நிறுவனத்தில் காணப்பட்ட கடுமையான நிதி நெருக்கடி காரணமாக பணம் | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வீத வரியை உரிய திகதிகளில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செலுத்தப்படவில்லை. எனினம் எதிர்காலத்தில் இயலுமான வரை வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதி காலாண்டு ரீதியில் கொடுப்பனவு செய்வதற்கு பொருத்தமான நவடிக்கைகள் எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | |
| (ஆ) நாவலப்பிட்டி கந்தல் ஓயா தோட்டத்திலுள்ள தேயிலை தொழிற்சாலை 2003 ஆம் ஆண்டு முதல் செயலிழந்த நிலையில் காணப்பட்ட போதும் அப்போதைய தேயிலை தொழிற்சாலை இயந்திர திருத்துனர் வேறு தொழிற்சாலையொன்றுக்கு இணைக்கப்படவில்லை. செயல்படாத தொழிற்சாலைக்கு இயந்திர திருத்துனர் பதவியொன்று தேவையில்லை, ஆனால் இந்த தொழிலாளி தொழிற்சாலையுடன் இணைக்கப்பட்டிருந்தார். அவருக்காக 2003 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 4,162,439 சம்பளம் சிக்கனமற்ற வகையில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தற்போதும் அந்த ஊழியர் செயலற்ற தொழிற்சாலையில் இணைக்கப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது. அவதானிக்க முடிந்தது. | உதவி தேயிலை தொழிற்சாலைகளின் இயந்திர திருத்துனராக செயற்படும் ஐ.எம்.ஜினதாச அவர்கள் கந்தல் ஓயா மற்றும் ஏனைய அலுவலக தோட்டகங்களில் வெளிக்கள வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அறிய தருகின்றோம் | இந்த ஊழியரை வேறொரு தொழிற்சாலையில் இணைத்து கடமைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 கணக்காய்விற்காக சான்றுக்கள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களை சட்டரீதியாக தயாரித்து சமர்ப்பிக்க வேண்டிய திகதி கடந்ததன் பின்னர் சபையால் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக தனியார் கணக்கீட்டு நிறுவனமொன்று பெறுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இப்பெறுகை செயற்பாடுகளை பரீட்சிக்கும் போது கூறுவிலை திறக்கும் சந்தர்ப்பத்தில் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கேள்விதாரர்கள் தெரிவு சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் Yellow pages இன் Rainbow Pages மூலம் துறைசார் கணக்காளர் நிறுவனங்கள் தேடப்பட்டு கேள்வி கோரப்பட்டிருந்தன. 2019 ஜுன் 24 ஆந் திகதி | அரசின் பெறுகை செயற்பாட்டின் வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வருகை தருமாறு பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3(ஆ) பிரிவின் பிரகாரம் கேள்விதாரருக்கு அழைப்பு விடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3 பிரிவின் பிரகாரம் கேள்வி பகிரங்கமாக திறந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கேள்விப்பத்திரங்களின் இறுதி நேரத்திற்கு முன்னர் இத்தீர்மானம் தலைவரால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. போதியளவு கேள்விகள் இல்லாமையே இதற்கான காரணங்களாகும். 04 நாட்கள் காலந்தாழ்த்துவது தொடர்பாக வழங்குனர் பிரிவின் மூலம் கேள்விதாரர்களுக்கு அறிவிக்கப்படாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகளை நீக்கவுதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கேள்வி திறத்தல் பகிரங்மாக திறத்தல் அத்தியவசியமற்ற விடமொன்றல்ல. அத்துடன் 2020/06/24 ஆந் திகதி கேள்விர்கள் நிறுவனத்திற்கு வருகை தரவில்லை. |

### 3.6 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 15 தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் 02 இறப்பர் தொழிற்சாலைகள் காணப்படுவதுடன் இதில் நாளாந்தம் 77,000 கிலோ கிராம் உற்பத்தி இயலளவுடன் கூடிய 8 தேயிலைத் தொழிற்சாலைகள் இதுவரை செயலற்று காணப்படுகின்றன. அத்துடன் நாளாந்த 3000 லீற்றர் உற்பத்தி இயலளவிலான இரண்டு இறப்பர் தொழிற்சாலைகள் இதுவரை செயலற்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | தேயிலை மற்றும் இறப்பர் தொழிற்சாலைகளின் இயலளவு தொடர்பாக தகவல்கள் இந்த இணைப்பில் தரப்பட்டுள்ளன. | தொழிற்சாலைகளின் உயர் இயலளவை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் எத்தல் வேண்டும். |

### 3.7 பதவியணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சபையின் மனித வளங்கள் முகாமையாளர் முகாமையாளர் (சட்டம்) ஆகிய பதவிகளுக்காக MM 1-1 | அவர்கள் இரண்டு பேரும் நேர்முக பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளதாக அறிய தருகின்றேன். அவ்வாறு தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள இரண்டு விண்ணப்பதாரர்களை | முகாமைத்துவம் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சம்பளத் தொகுதியில் வைக்கப்பட வேண்டிய போதும் 2017 ஏப்ரல் 01 ஆந் திகதிய இந்த உத்தியோகத்தரின் நியமனக் கடிதத்தின் பிரகாரம் HM 1-1 சம்பளத் தொகுதியில் 10 ஆம் படிமுறையில் அமர்த்தப்பட்டு சபையின் தலைவரால் நியமனக் கடிதம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் நியமனத் திகதியில் இருந்து 2019 திசெம்பர் வரை ரூபா 3,937,668 ஆன சட்டரீதியற்ற சம்பளமொன்று வழங்கப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவு 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் 5 மற்றும் 8 இபிரிவின் கீழ் செலுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும், அந்தப் பிரிவுகளில் அத்தகைய கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான குறிப்பிட்ட தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | பொதுவான பயிலுனர்களாக ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய முடியாமையால் வெளியில் நடைமுறை சம்பள தொகுதியில் அமர்த்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தது.<br>மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் 5.b, 5.e, 8.8(1)(b), 8.1(b) இன் கீழ் சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் முறையான அங்கீகாரங்கள் அதற்காக வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் இரண்டாம் அத்தியாயத்தின் 6 ஆம் உப பிரிவின் நியதிகளுக்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பதவியொன்றான ‘‘முகாமையாளர் (வனம்)’’ பதவிக்காக 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் அப்போதய உதவி தோட்ட அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டில் மாத்திரம் ரூபா 611,329 ஆன சட்டரீதியற்ற படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முகாமையாளர் - வன வளங்கள் விசாரணையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உள்ளவாறாக இருந்த போதும் பணிப்பாளர் சபைக்கு கிடைத்திருந்த அதிகாரத்தின் பேரில் கீழே காட்டப்பட்டுள்ள சேவை தேவைகளின் பிரகாரம் உத்தியோகத்தர் முகாமையாளர் - வன வளங்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியில் காணப்படாத பதவியொன்றாக இருப்பதால் குறித்த பதவியை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய டீஎம்.எஸ்/ஈ3/34/4/218/1(Vol-1) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் தேவையான பதவியணியினர் அங்கீகரித்துக் | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக நியமனம் வழங்குதல்<br>2011 ஆம் ஆண்டுக்கு திட்டமிடப்பட்ட பதவியணியினர் திட்டம் 2017 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் நிறுவனத்தின் அத்தியாவசியப் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பதவிகள் மற்றும் ஊழியர் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தனர். எனினும் அங்கீகரிக்கப்பட்ட பதவி யணியில் உள்ளடக்கப்படாத ஆறு பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் ரூபா 7,849,074 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பணிகள் ஏனைய மீளமைப்பு செயற்பாடுகள் / விசேட செயற்திட்டங்கள் மூலம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான ஊழியர்கள் மேற்படி ஊழியர் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பதவிகளில் உள்ளடக்கப்படாமையால் நிறுவனத்திற்கு ஏற்ற வகையில் நடைமுறையில் பொருத்தமான ஊழியர் எண்ணிக்கைத் திட்டத்தின் வரைவொன்று தயாரிக்கப்பட்டு அப்போதய மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உரித்தான அரச முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டிருந்ததன் பின்னர் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தேசிய சம்பளம் மற்றும் ஊழியர்கள் ஆணைக்குழுவில் வரிசை அமைச்சு, பொது திறைசேரி மற்றும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் தலைமையில் நடை பெற்றதுடன் அதன் போது காணப்படும் பதவியணி திட்டத்தை திருத்தம் செய்வதற்கு முன்னர் அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் அத்ன் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நிறுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எண்ணிக்கையில் மாத்திரம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தியவசிய வேறு பதவிகள் இருந்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 19 ஆந் திகதி வேலை இடைநிறுத்ததிற்கு உட்பட்ட கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி ஐந்து | ஒழுக்காற்று நியதிகளை மிகைத்து நடவடிக்கை எடுத்தல் மேலே பெயர் குறிப்பிட்ட உத்தியோகத்தரால் | ஒழுக்காற்று நியதிகளை மீறி நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு |

| | | |
|---|---|---|
| குற்றச்சாட்டுக்களுடன் முறைப்பாட்டு பத்திரமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 114,895 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்றுப் பரிசோதனையின் போது அந்த உத்தியோகத்தர் ஐந்து குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளியாக 2019 மார்ச் 11 ஆந் திகதி கூடிய ஒழுக்காற்று பரிசோதனைக் குழு தீர்மானித்திருந்தது. எனினும் 2019 மார்ச் 26 ஆந் திகதி நடைபெற்ற இரண்டாவது பணிப்பாளர் சபை அறிக்கையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் குற்றச்சாட்டுக்கள் கருத்திற் கொள்ளாமல் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அப்போதய தலைவருக்கு அனுப்பிய மேன்முறையீட்டின் பேரில் அவரின் செயற்பாட்டினால் நிறுவனத்திற்கு நிதி நட்டமொன்று ஏற்படவில்லையென்பதால் அவரின் சம்பளம் மற்றும் படிகள் விடுவிப்பதற்கு இந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவருக்கு சலுகை வழங்க நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முகாமைத்துவம் கவனம் எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த கணக்குகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் சபையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அண்மித்த 5 ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது பல ஆண்டுகள் தாமதமாகயிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2021 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2021 மார்ச் மாதம் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் கணக்குகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது. | பீஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சபையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |